DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 128/2023**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | பலுத்தசார் | Father Name – அருள் | |
| Age | 47 | Village – | பொம்மிநாயக்கன்பட்டி |
| | | Taluk – | உத்தமபாளையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2026.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

1. நான் சாட்சி சொல்ல இந்த நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. என்னை சாட்சி சொல்ல யார் அழைத்தது என்றால் 1ம் வாதி அழைத்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான் சொல்லி தயார் செய்தது. நானும் 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆள்துளை கிணறு அமைக்கும் வேலை செய்கிறேன். நான் ஆள்துளை கிணறு தொழில் செய்வதற்கு 1ம் பிரதிவாதியிடம் அவருடைய தங்க நகைகளை வாங்கியது சம்மந்தமாக எங்களுக்குள் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான், 2023ம் ஆண்டு வரை பேசிவந்தோம்.

2. எனது தாத்தா ஞானபிரகாசம் இறக்கும் வரை 1ம் பிரதிவாதி எங்களது கூட்டுக்குடும்ப சொத்தில் ஒரு பாகத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் எனது தாயார் இறக்கும்வரை 1ம்பிரதிவாதி ஒரு பகுதியில் விவசாயம் செய்து வந்தார், அதன் பின்பு அவர் விவசாயம் செய்யவில்லை. எனது தாத்தா ஞானப்பிரகாசத்திற்கு பாத்தியப்பட்ட எட்டு குழி நிலத்தில் சில நிலங்களை தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த 8 குழி நிலத்தில் அவர் தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்த 2 ¾ குழியை தவிர்த்து

மீத நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள நிலத்தில் பாகம் கேட்டு 1ம் பிரதிவாதி எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான், நாங்களும் பதில் அறிவிப்பு அனுப்பினோம்.

3. 1ம் வாதி அவர் தொழிலுக்காக 1ம் பிரதிவாதியிடமிருந்து அவருடைய நகையை வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்கள் எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 01.10.2019 ம் தேதி பிரதிவாதிகளிடம் ரூ.4,00,000 கொடுத்ததாக சொல்லியுள்ள தேதியில் யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் கஷ்பர், நான் மற்றும் 1ம் வாதி யேசு மெர்க்யூ. அவ்வாறு ரூ.4,00,000 கொடுத்தபோது எழுத்துப்பூர்வமாக ஆவணம் எதுவும் எழுதப்பட்டதா என்றால் எழுதப்படவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது 1ம் வாதி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருவதால் 1ம் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.08.04 14:45:38 +0530

District Munsif,
Bodinayakanur.